
## திராவிடத்தால் வாழ்கிறோம்

999

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

133

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த குமாரபாளையம் ஜே.கே.கே. சுந்தரம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

## குமாரபாளையம் ஜே.கே.கே. சுந்தரம்

# நெஞ்சமெல்லாம் கழக உணர்வு!

திராவிட முன்னேற்றக் கழகம், சமூக சமத்துவ இயக்கம், சமூக நீதி இயக்கம். கழகத்தின் தொடக்க காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையும் பேச்சாற்றலும், தமிழக இளைஞர் பட்டாளத்தை ஒட்டுமொத்தமாகக் கவர்ந்தது. அவரது பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, செல்வாக்குமிக்க குடும்பத்தில் பிறந்த இளைஞர்களும், கழகத்தில் தங்களை ஐக்கியமாக்கிக் கொண்டுள்ளனர். அந்த வகையில் பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்பாக ஒன்றுபட்ட சேலம் மாவட்டக் கழக வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்” ஜே.கே.கே.சுந்தரம். பேராளர், பெருங்கொடையாளர் என கலைஞரால் பாராட்டப்பெற்றவர்.

“அழகிய நந்தவனம் போன்று குடும்பம், நிறைவான பொருளாதார வசதி. இத்தகைய சூழலில் தானுண்டு தன் குடும்பம் உண்டு என்றில்லாமல், தமிழ் இனப் பாதுகாப்புப் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, 1944-லேயே திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர், குமாரபாளையம் ஜே.கே.கே.சுந்தரம்” என அவருக்குப் ‘பேரறிஞர் அண்ணா விருது’ வழங்கும் நிகழ்ச்சியில் பெருமையுடன் குறிப்பிட்டார், முத்தமிழறிஞர் கலைஞர்.

1925-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் தேதி, குமாரபாளையத்தில் ஓரளவு செல்வாக்கான குடும்பத்தில் பிறந்தவர். பெற்றோர் ஜே.கே.கந்தசாமி – ரங்கம்மாள். கந்தசாமி அவர்கள், ஜவுளி உற்பத்தித் தொழிலில் வெற்றிகரமாக ஈடுபட்டு வந்தவர். சுந்தரம், தனது பள்ளிப் படிப்புக்குப் பின்னர், ஈரோட்டில் சுழன்றடித்து வந்த கழக அரசியல் புயலில் காந்தமாக ஈர்க்கப்பட்டார்.

### தொடக்க கால உறுப்பினர்

குடும்பத்தின் ஜவுளித் தொழில் காரணமாக, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று வந்துகொண்டிருந்த சுந்தரம், 1944-களில் இலங்கையில் திராவிடர் கழகச் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். 1949-ஆம் ஆண்டில், கழகம் தொடங்கப்பட்ட போதே, இராபின்சன் பூங்காவில் கூடிய கூட்டத்தில் ஒருவராக, உறுப்பினராக இணைந்துகொண்டார். 1954 முதல் 1958 வரை இலங்கையில் வாழ்ந்தபோது, இலங்கையில் தி.மு.கழகக் கிளையில் இணைந்து செயல்படலானார். அங்கு ஒரு கிளைக்கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்துள்ளார்.

இந்தியா – இலங்கை என தொழில் இருந்தாலும், தங்களது வணிகத்துடன் கழக வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்டிருந்தார். கிளைக் கழகப் பொறுப்புகளுக்குப் பின்னர், செயற்குழு உறுப்பினர், 1973ஆம் ஆண்டிலிருந்து சொத்துப் பாதுகாப்புக் குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று, தனது இறுதிக் காலம் வரை இயங்கியவர்.

### மாவட்டக் கழக முன்னோடி

ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தில் இருந்து நாமக்கல் மாவட்டம் பிரிக்கப்பட்ட போது, கழக மாவட்டச் செயலாளராக இருந்த கே.கே.வீரப்பன் அவர்களுக்குப் பக்கபலமாக நின்றவர்.




ஈரோட்டுப் பாசறையில் பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் இருந்தபோதே அவர்களோடு, நல்ல தோழமையைப் பேணி வந்தவர், சுந்தரம். அந்தத் தோழமையில் இருந்து கடைசிவரை அவர் மாறவே இல்லை. கழக நிகழ்ச்சிகளுக்காக ஈரோடு பகுதிகளுக்குச் சென்றால், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் சுந்தரம் அவர்களின் இல்லத்தில் தங்குவர். ஏ.வி.பி. ஆசைத்தம்பி, சாதிக் பாட்சா, பேராசிரியர் உள்ளிட்ட கழக முன்னோடிகள் அனைவரும் தங்களின் கழகச் சுற்றுப்பயணங்களின்போது சுந்தரம் அவர்களின் இல்லத்தில் தங்கிச் செல்வது வழக்கம்.

இன்றைய கழகத் தலைவர் அவர்களும், அப்பகுதியில் இளைஞர் அணி தொடர்பான பணிகளுக்கு சுந்தரம் அவர்களின் இல்லத்தில் தங்கி, இளைஞர் அணி வேலைகளை ஊக்கப்படுத்தி இருக்கிறார். அப்போது, தலைவர்களைப் பார்க்க கட்சியினர், தொண்டர்கள் என எத்தனை பேர் வந்தாலும், அவர்களுக்கு உணவு உபசரிப்பு நடக்கும். செல்வந்தர் வீடாக இருந்தாலும், கருப்பு சிவப்புக்கரை வேட்டி கண்டால், சுந்தரம் வீட்டுக் கதவுகள் தானாகத் திறக்கும் என்கின்றனர், குமாரபாளையம் கழகத்தினர்.

### பொருளுதவிப் பணிகள்

பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், ஆண்டுதோறும் அண்ணா பிறந்தநாளினை சிறப்பான விழாவாக ஏற்பாடு செய்து, சீர்திருத்த திருமணங்களை முன்னின்று நடத்தி வைத்துள்ளார். அவர் தலைமையேற்று நடத்தும் திருமணங்களில், அந்தக் குடும்பத்தினரின் வீட்டு உபயோகப் பொருட்களையும் வழங்குவது சுந்தரம் அவர்களின் வழக்கம். தவிர, குமாரபாளையம் நகரக் கழகம் மற்றும் சேலம் மாவட்டத்தில் பல பகுதியில் கழகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு ஏராளமாக நிதி உதவி வழங்கியுள்ளார்.

> “நிறைவான பொருளாதார வசதியிலும், நெஞ்சமெல்லாம் கழக உணர்வுடனே செயல்பட்டவர்.”

கழகத்தினருக்கு மட்டுமில்லாமல், பல்வேறு கருத்துடைய அடித்தட்டு மக்களிடம் அன்போடு பழகி, அவர்கள் தேவைகளைத் தெரிந்து, அவற்றை நிறைவு செய்பவர் சுந்தரம் என கலைஞரால் பாராட்டப் பெற்றவர். கழகத்தின் வேண்டுகோளை ஏற்று, ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாளை சமத்துவ நாளாகக் கொண்டாட பொருளுதவிகளைச் செய்தவர். ஏராளமான மாணவர்களுக்கு, கல்விக் கட்டணங்களைச் செலுத்தி இருக்கிறார். இப்படியான கணக்கற்ற பொருளுதவிகளால் இன்றும் குமாரபாளையத்தில் ஜே.கே.கே. சுந்தரம் அவர்களின் பெயர் வள்ளல் என்கிற அடைமொழியோடு புகழ் பெற்றுள்ளது.

### அண்ணா விருது

நிறைவான பொருளாதார வசதியிலும், நெஞ்சமெல்லாம் கழக உணர்வுடனே செயல்பட்டவர். சமூக நீதி கருத்தில் உறுதி கொண்ட சுந்தரம் அவர்களுக்கு 2004-ஆம் ஆண்டில், கோவையில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், ‘அண்ணா விருது’ வழங்கி சிறப்பு செய்தார், தலைவர் கலைஞர்.

“அண்ணா போன்று தலைவர் கலைஞர் அவர்களது பேச்சும், எழுத்தும் என்னைக் கவர்ந்ததோடு, கலைஞரது விவேகமிக்க செயல்பாடுகளும், மெழுகுவர்த்தியாக்கிக் கொள்ளும் தியாக உணர்வும், அன்பான பாசப்பொழிவும் கண்டு சிலிர்த்துப்போனேன். அதுதான் என்னை ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் கழகத்தில் இயங்க வைத்தது” என அன்று நெஞ்சம் நெகிழக் கூறினார் ஜே.கே.கே.சுந்தரம்.

“கொள்கையை வணிகமாக்கிப் பொருள் குவித்து, அண்ணாவின் பெயரையே களங்கப்படுத்திக் கொண்டிருப்போர் மத்தியில், கழகத்திற்கு ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை எடைபோட்டுப் பார்க்காமல், வணிகமும் – தன் குடும்பமும் என்றும் கழக வளர்ச்சிக்கே என உயிர்மூச்சாய்க் கொண்டு வாழ்ந்து வருபவர் ஜே.கே.கே.சுந்தரம்” என கலைஞர் தனது உரையில் பெருமையுடன் குறிப்பிட்டார்.

சுந்தரம் மட்டுமல்ல; அவரது வழியில் அவரது குடும்பத்தினரும் கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளதுதான் கொள்கை அரசியலுக்குச் சான்றாக உள்ளது. 2005-ஆம் ஆண்டு, வயது மூப்பு காரணமாக உடல்நலம் குன்றி மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது, கலைஞர் தொலைபேசியில் நலம் விசாரித்ததுடன், இன்றைய கழகத் தலைவர் அவர்களை நேரில் அனுப்பிவைத்து, கழகக் குடும்பத்தினருக்கு கழகம் துணை நிற்கும் என நம்பிக்கை அளித்தார். அதே ஆண்டு ஜூன் 27 அன்று, ஜே.கே.கே. சுந்தரம் மறைவு எய்தினார். ஒன்றுபட்ட சேலம் மாவட்டக் கழகத்தினர் அனைவரும் திரண்டு வந்து, அவருக்கு இறுதி மரியாதை செய்தனர்.

ஒவ்வோர் ஆண்டும், அவர் நினைவு நாளில் அதே உணர்வுடன் மாவட்டக் கழகத்தினர் திரண்டு வந்து மரியாதை செய்வதுதான், கழகம் முன்னோடிகளை மறவாது என்பதற்கான சான்று! அந்த உணர்வு என்றென்றும் நீடிக்கும்!

...துடிக்கும்

## திராவிட சினிமா, திரையிடல் – உரையாடல்!




சேலம், பெரியார் பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை, முத்தமிழறிஞர் தமிழ்வேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் சார்பாக, திராவிட இயக்க இதழியல், இலக்கியம் சார்ந்து அவ்வப் போது நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தற்போது அக்டோபர் 27 முதல் 31 வரை ‘திராவிட சினிமா, திரையாடல் – உரையாடல்’ நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நிர்வாகக் குழு உறுப்பினரும், முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மையத்தின் இயக்குநருமான பேராசிரியர் இரா.சுப்பிரமணி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்ச்சியில், ஒவ்வொரு நாளும் ஒரு படம் குறித்து உரையாடல் நடைபெறவுள்ளது.

27.10.2025 அன்று கலைஞரின் ‘பராசக்தி’ திரைப்படம் குறித்தும், 28.10.2025 அன்று எம்.ஆர்.ராதாவின் ‘ரத்தக் கண்ணீர்’ திரைப்படம் குறித்தும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் கோவி.கனகவிநாயகம் உரையாடல் நிகழ்த்தவுள்ளார்.

29.10.2025 அன்று அண்ணாவின் ‘நல்லதம்பி’ திரைப்படம் குறித்தும், ‘67-இல் என்.எஸ்.கிருஷ்ணன்’ திரைப்படம் குறித்தும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் பாவேந்தர் பாரதிதாசன் இருக்கை பொறுப்பாளர் மணிகோ பன்னீர்செல்வம் உரையாடல் நிகழ்த்தவுள்ளார். 31.10.2025 அன்று, கலைஞரின் ‘பணம்’ திரைப்படம் குறித்து சென்னை ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் செ.சௌந்தரி உரையாடவுள்ளார்.

பழமைவாதங்களைப் போதித்துக் கொண்டிருந்த தமிழ் சினிமாவின் போக்கை அரசியல், மானுட வாழ்வியல், சமூக நீதி குறித்து நோக்கி பேசச் செய்து, தடம் மாற்றியது, திராவிட சினிமா. அதில் மைல்கற்களாக அமைந்த சில திரைப்படங்களை இன்றைய இளம் தலைமுறையும் அறிந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது, சேலம் பெரியார் பல்கலைக்கழகம்.

## ஃப்ளாஷ்பேக்





சி.மாரிமுத்து

### மணக்கோலத்தில் ஆர்ப்பாட்டம்!

2018-ஆம் ஆண்டு மே மாதம் 25-ஆம் தேதி, எங்களின் திருமணத்தை கழகத் தலைவர் அவர்கள் தலைமையேற்று, மேல்மருவத்தூர் திருமண மண்டபத்தில் நடத்தி வைத்தார். அன்று, தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு சம்பவத்தைக் கண்டித்து, மதுராந்தகத்தில் தளபதி அவர்கள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மணமக்களாகிய நாங்கள் தளபதி அவர்களுடனேயே சென்று அந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோம்.

– சி.மாரிமுத்து–பிரியதர்ஷினி,
சித்தாமூர் ஒன்றியம்,
காஞ்சிபுரம் தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வேட்பாளர் பட்டியல் குழு!

28.12.1956 அன்று சேலத்தில் நடைபெற்ற பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில், 1957 தேர்தலைச் சந்திக்க குழுக்கள் அமைக்கப்பட்டன. பொதுச் செயலாளர் நாவலர் தலைமையில் வேட்பாளர் தேர்வுக்குழு அமைக்கப்பட்டது. கலைஞர், என்.வி.நடராசன், ஈ.வெ.கி. சம்பத், கே.ஏ.மதியழகன், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, எஸ்.முத்து ஆகியோரைக் கொண்ட குழு வேட்பாளர்களைத் தேர்வு செய்து, பட்டியலை வெளியிட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131